**செய்தி வெளியீடு எண்.721** **நாள்.16.10.2009**

## தீயணைப்புத் துறையின் விபத்தில்லா தீபாவளி விழிப்புணர்வு பிரச்சாரம்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பாதுகாப்பாக பட்டாசு வெடிப்பது மற்றும் விபத்தில்லா தீபாவளி கொண்டாட விழிப்புணர்வு செயல்முறைவிளக்கப் பயிற்சி இராயபுரம் செயிண்ட் பீட்டர்ஸ் மேல்நிலைப்பள்ளி வளாக மைதானத்தில் 16.10.2009 காலை 9.00 மணிக்கு நடைபெற்றது. இச்செயல்முறை விளக்கத்தில் வடசென்னை கோட்ட அலுவலர் திரு.டி.என்.வேலாயுதன் நாயர், உதவி கோட்ட அலுவலர் திரு.ஏ.குமாரசாமி, இராயபுரம் நிலைய அலுவலர் திரு.அ.இராவணன், செயிண்ட் பீட்டர்ஸ் பள்ளி தாளாளர் திரு.சகாயராஜ் மற்றும் தீயணைப்புத் துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் 3000 மாணவர்கள் பங்கேற்றனர்.

இச்செயல்முறை விளக்கத்தில், கயிறு மூலம் மீட்புப் பயிற்சி, ஏணி மூலம் மீட்புப் பயிற்சி, உபகரணங்கள் இல்லாமல் மீட்புப் பயிற்சி, தீயணைப்புத் துறை நவீன உபகரணங்கள், குடிசை அமைத்து தீயணைப்புப்பணி, பட்டாசுகளை பாதுகாப்பாக வெடிக்கும் முறை, எண்ணெய் தீவிபத்து அணைப்பு பயிற்சி, ராட்சத ஏணி (42 மீட்டர் பிராண்டோ ஸ்கைலிப்ட்) மூலம் உயிர்மீட்பு பயிற்சி ஆகியவை பலத்த ஆரவாரத்திற்கிடையே செய்து காண்பிக்கப்பட்டது. உதவிக் கோட்ட அலுவலர் திரு.குமாரசாமி, நிலைய அலுவலர் திரு.இராவணன் ஆகியோர் செயல்முறை விளக்கத்தை மாணவர்களிடையே விளக்கி பேசினார்கள்.

இந்நிகழ்ச்சி நாளை நடைபெறவுள்ள தீபாவளி பண்டிகையை எச்சரிக்கையுடன் கொண்டாட நல்ல விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.